# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## ***2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி***

*(2020.01.14 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : *இவ்வாசகம், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2020, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து பொருளாதாரச் சேவை விதிப்பனவை நீக்குவதாகும்.*

ச.வ.- ஒ. 62/2019

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2**. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உப்பிரிவில் "ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமாக ஒவ்வொரு ஆளிடமிருந்தும், பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2020 ஆம் ஆண்டு சனவரி 1 ஆந் தேதிக்கு முன்பதாக ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டுக்குமாக ஒவ்வொரு ஆளிடமிருந்தும், பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்:". 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.